# பத்திரிக்கை செய்தி

கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 1970 - 74 ஆம் ஆண்டில் வேளாண்மை இளம் அறிவியல் பயின்று பட்டம் பெற்ற 160 மாணவர்களில் 100 பேர் தாங்கள் பட்டம் பெற்ற 50 ஆம் ஆண்டு நிறைவை பிப்ரவரி 16 மற்றும் 17ஆம் தேதிகளில் வேளாண்மை பல்கலைக்கழக பொன்விழா அரங்கில் கூடி கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்த 1970 - 74 ஆண்டின் மாணவர்கள் தனித்துவமானவர்கள். பலர் வேளாண்மை பல்கலைக்கழகத்திலும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி குழுமத்திலும் (ICAR) தமிழ்நாடு வேளாண்மைத்துறையிலும் நாட்டின் மிக முக்கிய வங்கிகளிலும் இயக்குநர், தலைமை நிர்வாகி, பொதுமேலாளர் போன்ற பதவிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள்.

இந் நிகழ்வில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் திருமிகு.கீதாலட்சுமி அவர்கள் கலந்து கொண்டு தலைமை உரையாற்றினார். அது சமயம் இம் மாணவர்களில் ஒருவரான யூனியன் வங்கி ஓய்வு பெற்ற முதுநிலை மேலாளர் திரு.க.தேவசுந்தரம் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் உழவியல் துறையில் முது அறிவியல் படிப்பில் சிறந்த மாணவருக்கு தங்கப் பதக்கம் வழங்க ஒரு அறக்கட்டளை துவங்க ரூபாய் 8 இலட்சம் வழங்கினார்.